## காவல்துறை, புதுச்சேரி

தேதி 3/8/2011

3/8/2011 அன்று அதிகாலை 2.15 மணிக்கு தனசேகர் (20) த/பெ செல்வராஜ், எண் 2/62 பிள்ளையார் கோவில் வீதி, பாலக்கடை, நாகூர், நாகப்பட்டினம், தமிழ்நாடு என்பவர் புகார்தாரர் ராஜா த/பெ மாணிக்கம், எண் 13 இரண்டாவது குறுக்குத்தெரு, ராஜா நகர், ஒர்லையன்பேட்டை என்வரின் வீட்டின் படிக்கட்டு வழியாக ஏறி முதல் மாடியில் உள்ள வீட்டின் கதவை உடைத்து இரண்டு செல்போன்கள் மற்றும் ரூ 12,500/- ரெக்கத்தை திருடினார். அப்போழுது சத்தம் கேட்டு விழித்த புகார்தாரர் ராஜா அவரை பிடிக்க முயற்சி செய்யபோது அவர் தப்பித்து ஓடமுயன்றார். எனினும் சுற்றத்தார் மற்றும் ரோந்து காவலர்களின் உதவியுடன் அவரை பிடித்து ஒர்லையன்பேட்டை காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். அவரை காவல் நிலையத்தில் ஒப்படைக்கும் போது இரண்டு செல்போன்கள், திருடப்பட்ட பணம் மற்றும் ஒரு பஜாஜ் இருசக்கர வண்டி எண் PY-01-BB-9120 (ஒர்லையன்பேட்டை காவல் நிலைய குற்ற வழக்கு எண் 335/2011 பிரிவு 379 இ.த.ச சம்மந்தப்பட்டது) சேர்த்து ஒப்படைத்தனர். இது சம்மந்தமாக ஒர்லையன்பேட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. முத்துசாமி குற்ற எண் 335/2011 பிரிவு 457, 380 இ.த.ச-ல் வழக்கு பதிவு செய்தார். இதற்கிடையில் முத்து (34) த/பெ குழந்தைவேலு எண் 6 இரண்டாவது குறுக்குத்தெரு, ராஜா நகர் என்பவர் நிலையத்தில் வந்து ஒரு புகார் அளித்தார். அதில் மேற்கண்ட நபர் தனது வீட்டின் மதில் சுவரை தாண்டி ஜன்னல் வழயாக 7 செல்பேன்களை திருடியதாக புகார் அளித்தார். இதனடிப்படையில் ஒர்லையன்பேட்டை காவல் நிலைய தலைமை காவலர் 942 ஆறுமுகம் குற்ற எண் 336/2011 பிரிவு 457, 380 இ.த.ச. வழக்கு பதிவு செய்தார். ஒர்லையன்பேட்டை காவல் நிலைய அதிகாரி மேற்கொண்டு விசாரிக்கையில் குற்றவாளி தனசேகர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தர். அதில் மேறகண்ட குற்றங்களை ஒப்புக்கொண்டது மட்டுமல்லாமல் மேலும் ஒரு இடத்தில் கடந்த 7/6/2011 அன்று பஜாஜ் வண்டி எண் PY-01-AN-4551, இரண்டு செல்போன்கள், 8 கிராம் எடையுள்ள 1 தங்க மோதிரம், 12 கிராம் எடையுள்ள 1 தங்க செயின் (மொத்த மதிப்பு 75,000) ஆகியவை திருடியுள்ளதாக ஒப்புக்கொண்டார். இதுசம்மந்தமாக திருமதி பாக்கியம் க/பெ வேளாங்கன்னி எண் 19, முதல் குறுக்குத்தெரு, சங்கோதியம்மன் கோவில் வீதி, ஒர்லையன்பேட்டை என்பவர் கொடுத்த புகாரின் பேரில் ஒர்லையன்பேட்டை காவல் நிலையத்தில் குற்ற வழக்கு எண் 246/2011 பிரிவு 380 இ.த.ச வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. மேலும் கடந்த 27/7/20011 அன்று ஆனந்தராஜ் த/பெ அன்துவான், எண் 27 ஒத்தவாடை வீதி, ஒர்லையன்பேட்டை என்பவரின் வீட்டின் முன் நிறுத்தியிருந்து பஜாஜ் இருசக்கர வண்டி எண் PY-01-BB-9120 திருடியதாக கூறினார். விசாரணையில் மேற்கண்ட நான்கு வழக்குகளிலும் திருடுபோன பொருட்கள் மீட்கப்பட்டது. இதன் மெத்த மதிப்பு சுமார் 1,75,000/- ஆகும். மேற்கொண்டு விசாரனை நடைப்பெற்று வருகின்றது.

* * *

A12/8A